தின குரல்





# விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் நிலத்தடி நீருக்கு வரி விதிக்கும் திட்டம்

ஏற்கெனவே, விளைச்சல் பாதிப்பு, உரிய விலையின்மை என அடுத்தடுத்து இன்னல்களை சமாளிக்க முடியாமல் தமிழக விவசாயிகள் தவித்து வரும் நிலையில், தற்போது நிலத்தடி நீருக்கும் வரி என்பது அவர்களை விவசாயத்தை விட்டே வெளியேற்றக் கூடிய ஆபத்தை உருவாக்கும் வகையில் அமைந்திருக்கிறது. எனவே, எத்தகைய இடையூறுகள் வந்தாலும் உணவு உற்பத்தி எனும் மகத்தான பணியை மேற்கொண்டிருக்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலத்தடி நீருக்கான வரி விதிக்கும் முடிவை கைவிட வேண்டும் என அரசியல் தலைவர்கள் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அன்புமணி ராமதாஸ் கூறுகையில் இந்திய முழுவதும் வேளாண்மைக்காக பயன்படுத்தப்படும் நிலத்தடி நீருக்கு வரி விதிக்கும் முறை மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுத்தப்பட இருப்பதாக மத்திய அரசின் நீர்வளத்துறை தெரிவித்திருக்கிறது. நிலத்தடி நீரை பயன்படுத்தும் உழவர்கள் அனுபவித்து வரும் துயரங்களையும், நெருக்கடிகளையும் புரிந்து கொள்ளாமல் இப்படி ஒரு திட்டத்தை செயல்படுத்த நீர்வள அமைச்சகம் திட்டமிடுவது கண்டிக்கத்தக்கது.

நிலத்தடி நீருக்கு வரி விதிக்கும் திட்டத்தின்படி, மாநில அரசுகள் மற்றும் உள்ளூர் நீர் பயன்பாட்டாளர்கள் அமைப்புகளின் மூலம் நிலத்தடி நீர் மையப்படுத்தப்பட்ட பகுதியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். அந்த நீரை அழுத்தத்தை பயன்படுத்தி உழவர்களின் வேளாண் பயன்பாட்டுக்காக அனுப்பும் வசதிகளும் செய்யப்பட்டி ருக்கும். அங்கிருந்து உழவர்கள் தங்களுக்குத் தேவையான நிலத்தடி நீரை பெறலாம். எவ்வளவுநீரை உழவர்கள் பெறுகிறார்களோ, அவ்வளவு நீருக்கு வரி விதிக்கப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் சி.ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை சோதனை அடிப்படையில் பல மாநிலங்களில் 22 இடங்களில் செயல்படுத்த இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். உழவர்கள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களில் இருந்து எடுக்கும் நிலத்தடி நீருக்கு வரி விதிக்கப்படுமா? வரியின் அளவு எவ்வளவாக இருக்கும்? என்பதெல்லாம் தெரியவில்லை. எது எப்படியிருந்தாலும் நிலத்தடி நீருக்கு வரி விதிக்கும் தத்துவம் அடிப்படையிலேயே தவறானது ஆகும்.

நிலத்தடி நீர் வீணாவதைத் தடுக்கும் வகையில் தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அரும்பாடு பட்டு நிலத்தடி நீரை எடுக்கும் எந்த உழவரும் அதை வீணாக்க மாட்டார்கள். நிலத்தடி நீர் வீணாவதை தடுக்க அரசு நினைத்தால் அது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தும் உழவர்களுக்கு வெகுமதிகளைக் கொடுத்து ஊக்குவிப்பதும் தான் சரியான நடவடிக்கையாக இருக்கும். வரி விதிப்பது சரியானதாக இருக்காது. அது ஏற்கனவே வாடிக்கொண்டிருக்கும் உழவர்களை மேலும் வாட்டும்.

நிலத்தடி நீர், குடிநீர் உள்ளிட்டவற்றுக்கு வரியும், கட்டணமும் விதிப்பதற்கான முயற்சிகள் கடந்த 15 ஆண்டுகளாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திமுக அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக்காலத்தில் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் வகையில் 2012-ஆம் ஆண்டில் தண்ணீர் கொள்கை வெளியிடப்பட்டது. அப்போதே அதை பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாக எதிர்த்தது. பின்னர் அதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு 2018, 2022 ஆகிய ஆண்டுகளிலும் நடைமுறைப்படுத்த மத்திய அரசு முயன்றது. ஒவ்வொரு முறை மத்திய அரசு இந்த முயற்சிகளில் ஈடுபட்ட போதும் அதை பாட்டாளி மக்கள் கட்சி தீவிரமாக எதிர்த்தது. இனியும் இதே நிலையே தொடரும். விளைபொருள்களுக்கு



போதிய விலை கிடைக்காதது, உரங்களின் விலை உயர்வு, சந்தை வசதிகள் இல்லாதது என ஏற்கனவே பல வகைகளில் உழவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நிலையில் வேளாண் பயன்பாட்டுக்கான நிலத்தடி நீருக்கு வரி விதித்து உழவர்களை மேலும் நெருக்கடிக்கு ஆளாக்கக் கூடாது. அத்தகைய ஆபத்தான திட்டத்தை தொடக்க நிலையிலேயே மத்திய அரசு கைவிட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "நாடு முழுவதும் விவசாயத்துக்காக பயன்படுத்தப்படும் நிலத்தடி நீரின் அளவுக்கு ஏற்ப வரி விதிக்கும் முறையை செயல்படுத்த இருப்பதாக வெளியாகியிருக்கும் மத்திய நீர்வளத்துறையின் அறிவிப்புக்கு தமிழகத்தின் ஒட்டுமொத்த விவசாயிகளும் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

திமுக அரசின் கூட்டணி தர்மத்தால் அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய நீர் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாத நிலையில், மாநிலத்தின் பெரும்பங்கு வேளாண்மைக்கு முதன்மை நீராக பயன்படுத்தப்படும் நிலத்தடி நீருக்கும் வரி விதிக்கும் மத்திய நீர்வளத்துறையின் முடிவு தமிழக விவசாயிகள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நிலத்தடி நீரின் அருமையையும், அவசியத்தையும் மாநிலத்தின் ஒவ்வொரு விவசாயியும் நன்றாக அறிந்து தேவைக்கேற்ப பயன்படுத்தி வரும் நிலையில், நிலத்தடி நீர் வீணடிக்கப்படுவதையும், தவறாக பயன்படுத்துவதையும் தடுக்கவே வரி விதிக்கப்படுவதாக மத்திய நீர்வளத்துறை கூறியிருக்கும் விளக்கம் ஏற்புடையதல்ல.

ஏற்கெனவே, விளைச்சல் பாதிப்பு, உரிய விலையின்மை என அடுத்தடுத்து இன்னல்களை சமாளிக்க முடியாமல் தமிழக விவசாயிகள் தவித்து வரும் நிலையில், தற்போது நிலத்தடி நீருக்கும் வரி என்பது அவர்களை விவசாயத்தை விட்டே வெளியேற்றக் கூடிய ஆபத்தை உருவாக்கும் வகையில் அமைந்திருக்கிறது. எனவே, எத்தகைய இடையூறுகள் வந்தாலும் உணவு உற்பத்தி எனும் மகத்தான பணியை மேற்கொண்டிருக்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலத்தடி நீருக்கான வரி விதிக்கும் முடிவை கைவிட வேண்டும் என மத்திய நீர்வளத்துறையை வலியுறுத்துகிறேன்," என்று அவர் கூறியுள்ளார்.

**நிலத்தடி நீரின் அருமையையும், அவசியத்தையும் மாநிலத்தின் ஒவ்வொரு விவசாயியும் நன்றாக அறிந்து தேவைக்கேற்ப பயன்படுத்தி வரும் நிலையில், நிலத்தடி நீர் வீணடிக்கப்படுவதையும், தவறாக பயன்படுத்துவதையும் தடுக்கவே வரி விதிக்கப்படுவதாக மத்திய நீர்வளத்துறை கூறியிருக்கும் விளக்கம் ஏற்புடையதல்ல**

### விவசாய சங்க தலைவர்கள் கண்டனம்

நிலத்தடி நீருக்கு வரி விதிப்பு திட்டம் என்பது விவசாயத்துக்கு சாவு மணி அடிக்க ஒன்றிய அரசு கொண்டுவரும் திட்டமாகும். இதனால் ஒட்டு மொத்த வேளாண்மையும் பாதிக்கப்படும். எனவே இத்திட்டத்தைகைவிடாவிட்டால்மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழக விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்தியா முழுவதும் வேளாண்மைக்காக பயன்படுத்தப்படும் நிலத்தடி நீருக்கு வரி விதிக்கும் முறையை ஒன்றிய அரசு மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுத்த இருப்பதாக ஒன்றிய அரசின் நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின்படி, மாநில அரசுகள் மற்றும் உள்ளூர் நீர் பயன்பாட்டாளர்கள் அமைப்புகளின் மூலம் நிலத்தடி நீர் மையப்படுத்தப்பட்ட பகுதியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். அங்கிருந்து உழவர்கள்



தங்களுக்கு தேவையான நிலத்தடி நீரை பெறலாம். எவ்வளவு நீரை உழவர்கள் பெறுகிறார்களோ, அவ்வளவு நீருக்கு வரி விதிக்கப்படும் என ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை சோதனை அடிப்படையில் பல மாநிலங்களில் 22 இடங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. உழவர்கள் தங்களுக்கு சொந்தமான நிலங்களில் இருந்து எடுக்கும் நிலத்தடி நீருக்கு வரிவிதிக்கப்படுமா? வரியின் அளவு எவ்வளவாக இருக்கும்? என்பதெல்லாம் தெரியவில்லை. நிலத்தடி நீர் வீணாவதைத் தடுக்கும் வகையில் தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. ஒன்றிய அரசின் இந்த முடிவு நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகள், விவசாய சங்கங்கள், விவசாயிகள் ஒன்றிய அரசுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர். தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன்: நிலத்தடி நீருக்கு வரிவிதிப்பு என்பது ஒட்டுமொத்த விவசாயிகள், வேளாண்மையை ஒடுக்கும் சட்டமாகும். இதை வன்மையாக கண்டிக்கிறோம். எனவே ஒன்றிய அரசு இந்த அறிவிப்பாணையை திரும்ப பெற வேண்டும்.

மாநில அரசு, விவசாயிகள் கருத்துகளை கேட்காமல் ஒன்றிய அரசு இதுபோன்ற நடவடிக்கையை துவங்க கூடாது. இச்சட்டம் வந்தால் உணவு உற்பத்தி அடியோடு பாதிக்கப்படும். உணவு பஞ்சம் ஏற்படும். மாநில அரசு பிரதமருக்கு கடிதம் மூலம் மறுப்பு தெரிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கையை கைவிடாவிட்டால் ஒன்றிய அரசுக்கு எதிராக மாபெரும் போராட்டம் நடத்தப்படும்.

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநில தலைவர் அய்யாக்கண்ணு: அரசாங்க நிலம், பட்டா நிலம் என நிலத்தில் பல பிரிவுகள் உள்ளது. நிலம் அந்த உரிமையாளர்களுக்கு சொந்தமானது. அந்த இடத்தில் அவர்கள் எதுவேண்டுமானாலும் செய்யலாம் என அரசியலமைப்பு சட்டம் சொல்கிறது. இந்நிலையில் நிலத்தடி நீருக்கு வரி போடும் திட்டம் தவறானது. ஜிஎஸ்டி உள்ளிட்ட மற்ற வரிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்காததால் ஒன்றிய அரசு இதுபோன்ற புதிய வரி சட்டங்களை கொண்டு வந்து மக்கள், விவசாயிகள் தலையில் இடி விழ வைக்கிறது.

இதுவிவசாயத்தைஒட்டுமொத்தமாக அழிக்க பார்க்கும் செயல். இந்த சட்டத்தை எதிர்க்கிறோம். இச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் மாபெரும் போராட்டம் நடத்தப்படும். இதுதொடர்பாக கோவையில் வரும் 5ம் தேதி நடைபெறும் அனைத்து விவசாயிகள் சங்க கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும். தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாநில கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்செல்வன்: வேளாண்மைக்காக பயன்படுத்தப்படும் நிலத்தடி நீருக்கு வரி விதிக்கப்படும் என்ற அறிவிப்பு விவசாயிகள் மத்தியில் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே குடிப்பதற்கு தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் நிலை உள்ளது. அதேபோல் விவசாயத்துக்கும் விலை கொடுத்து தண்ணீர் வாங்கும் நிலையை ஒன்றிய அரசு ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்களிடம் இதை ஒப்படைத்து விவசாயத்துக்கு சாவு மணி அடிக்க ஒன்றிய அரசு திட்டம் தீட்டி விட்டது. நாகை மாவட்ட திமுக விவசாய அணி துணை அமைப்பாளர் அன்புவேலன்: விவசாய பயன்பாட்டுக்கு உரிய நிலத்தடி நீரை பெற ஒன்றிய அரசு வரி விதிக்க திட்டம் வகுத்திருப்பது ஏற்கனவே வாடிக் கொண்டிருக்கும் உழவர்களை மேலும் வாட்டுவதாகும்.

இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்கள் கூட இதுபோன்ற வரியை விதிக்கவில்லை. நீர்ப்பாசன திட்டங்களை செயல்படுத்த நிறைய திட்டங்கள் வகுத்து சென்றனர். ஆனால், மோடி அரசு, வேளாண் பயன்பாட்டுக்கான நிலத்தடி நீரை பயன்படுத்த வரி விதிப்பதை ஏற்க முடியாது. விளைபொருள்களுக்கு போதிய விலை கிடைக்காதது, உரங்களின் விலை உயர்வு, சந்தை வசதிகள் இல்லாதது என ஏற்கனவே பல வகைகளில் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய நிலையில் வேளாண் பயன்பாட்டுக்கான நிலத்தடி நீருக்கு வரி விதித்து உழவர்களை மேலும் நெருக்கடிக்கு ஆளாக்கக்கூடாது. அத்தகைய ஆபத்தான திட்டத்தை தொடக்க நிலையிலேயே ஒன்றிய அரசு கைவிட வேண்டும். இல்லையெனில் இந்தியா முழுவதும் விவசாயிகள் ஒன்றுகூடி மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு விவசாய சங்க தலைவர்கள் தெரிவித்தனர்.

### தமிழகம் முழுவதும் விவசாயிகள் போராட்டம்

ஒன்றிய அரசின் நிலத்தடி நீர் வரிவிதிப்பு திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகம் முழுவதும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் விவசாயிகள் போராட்டம் நடத்தினர். டெல்டா மாவட்டங்களிலும் போராட்டம் நடந்தது. நாகை கலெக்டர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திரளான விவசாயிகள் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

மயிலாடுதுறை தலைமை தபால் நிலையம் முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாய அமைப்பான தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. திருவாரூர் ரயில் நிலையம் முன் இந்திய கம்யூனிஸ்ட் சார்புடைய தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் ஒன்றிய அரசின் நகல் எரிப்பு போராட்டம் நடந்தது. தஞ்சை பழைய பஸ் நிலையம் முன்பும் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் நிலத்தடி நீருக்கு வரி விதிக்கும் ஒன்றிய அரசை கண்டித்தும், உடனடியாக அறிவிப்பை திரும்ப பெறக்கோரியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. புதுக்கோட்டை தலைமை தபால் நிலையம் முன்பாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து போராட்டம் நடைபெற்றது. இதேபோல் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் விவசாயிகள் போராட்டம் நடத்தினர்.


**Niwas Housing Finance Private Limited**

(Formerly known as Indostar Home Finance Private Limited)
Regd. Office: - Unit No. 305, 3rd Floor, Wing 2/E, Corporate Avenue, Andheri- Ghatkopar Link Road, Chakala, Andheri (East), Mumbai – 400093
CIN : U65990MH2016PTC271587 Tel : +91 22 65202222
Email: connect@niwashfc.com; Website: www.niwashfc.com

NIWAS HOUSING FINANCE

**அறிவிப்பு**

முதன்மை உத்தரவு – வங்கி சாரா நிதி நிறுவன வீட்டுவசதி நிதி நிறுவனம் (ரிசர்வ் வங்கி) உத்தரவுகள், 2021 இன் பத்தி 93 இன் படி, 51(P–51), 2வது மாடி, டாக்டர் அம்பேத்கர் நகர், 1வது குறுக்குத் தெரு, 200 அடி சாலை, கொளத்தூர், தமிழ்நாடு 600099 இல் அமைந்துள்ள நிறுவனத்தின் கிளை அலுவலகம், அக்டோபர் 1, 2025 அன்று வணிக நேரத்தின் இறுதியிலிருந்து மூடப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஏனெனில் செயல்பாடுகள் எண்: 16, 3வது மாடி, நாராயண டவர்ஸ், அந்தோணி நகர், 200 அடி சாலை, கொளத்தூர், சென்னை – 600 099 இல் அமைந்துள்ள அருகிலுள்ள கிளை அலுவலகத்திற்கு மாற்றப்படும். ஏதேனும் உதவி தேவைப்பட்டால், மேலே குறிப்பிட்டுள்ளபடி அருகிலுள்ள கிளை அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது connect@niwashfc.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். இந்த அறிவிப்பை நிறுவனத்தின் வலைத்தளத்தில் (www.niwashfc.com) அணுகலாம்.

நிவாஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு
(முன்னர் இந்தோஸ்டார் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
Sd/-
நிதி சதானி
தலைமை இணக்க அதிகாரி

தேதி: 30-06-2025


DINAKURAL-TAMIL DAILY Owned and Published by G.Sathiyanarayanan from No.13, North Wall Road, Mint Terminus, Kondithopu, Chennai-600 079. Printed by: P.Basker at Ambiga Printers, No.37/19, Ayalur Muthiah Street, Kondithope, Chennai, -600 079. Ph.04142-236004 Fax :04142-236004 Editor : G.Sathiyanarayanan, email : dinakural.Sathiya@gmail.com, dinakuralnews@yahoo.com,dinakural .chennai@yahoo.in